

# கிரேக்க தத்துவஞானி அரிஸ்டாட்டிலும் வேதாத்திரி மகரிஷியும்

## அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

# இதனுள்ளே


1. **அரிஸ்டாட்டிலும் வேதாத்திரியும்**
2. குருவும் சீடரும்
3. அரிஸ்டாடில் வேதாத்திரி மகரிஷி தத்துவங்கள் ஒப்பீடு
4. உடல் ஆரோக்கியமே முக்கியமானது
5. சிந்தனை ஏன்?
6. வேதாத்திரியம் தரும் சிந்தனைகள
7. ஆனந்தம் ஆனந்தம்
8. வறுமை
9. மனமே எல்லாம்
10. கல்வி கல்வி கல்வி
11. கடவுள்
12. மனித வளம்


அறிவின் முழுமையை நோக்கியப் பயணத்தை ஊக்கப்படுத்துவதற்காக ஆங்காங்கே அந்தந்தக் கால கட்டங்களில் சிந்தனையாளர்கள், மகான்கள் வருவார்கள் என்பார் சுவாமி விவேகானந்தர்.

சிந்தனையாளர்கள் என்போர் அறிவின் முழுமை நோக்கிய பயணத்தை ஊக்கப்படுத்துபவர்கள் என்பது விளங்குகிறது.

அதாவது மழுங்கிய அறிவைக் கூர்மைப்படுத்த அவர்களின் சிந்தனைத் தெளிவு வேண்டும்.

சொற்கள் சாதாரணமாகப் பாமர மக்களுக்கும் புரிய வேண்டும். வாழ்வியல் பிறருக்கு வழிகாட்டுவதாக அமைய வேண்டும் என்பதே அதன் விளக்கம்.

இவ்வகையில் கிரேக்க தத்துவஞானி பிளேட்டோவின் சிந்தனைகளும் இந்திய தத்துவஞானி வேதாத்திரி மகரிஷியின் சிந்தனைகளும் சொல்லும், எழுத்தும், வாழ்வும் அமைந்துள்ளன என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

பண்டைய உலகில் தலைசிறந்த தத்துவஞானியாகவும், விஞ்ஞானியாகவும் திகழ்ந்தவர் அரிஸ்டாடில்.

இவர் முறையான தருக்கவியல் ஆராய்ச்சியைத் தோன்றுவித்தார்.

தத்துவத்தின் அனைத்துத் துறைகளையும் வளப்படுத்தினார். அறிவியலுக்கு அளவிறந்த அருந்தொண்டுகள் புரிந்தார்.

சுமார் இரண்டாயிரத்து நான்கு நூறு அண்டுகளுக்கு முன் தோன்றிய அரிஸ்டாட்லின் சிந்தனைகள் உலக வளர்ச்சிக்கு உரமாக விளங்கின.

நவீனச் சிந்தனையாளர்கள் உட்பட அனைவருக்குமே அவர் துருவ நட்சத்திரமாக விளங்கி வருகிறார். சிந்தனை ஏன் என்பதைப் பற்றியும் சிந்தித்த மாபெரும் சிந்தனையாளர் அவர்.

சாக்கிரட்டீசும், பிளேட்டோ.வும் அரிஸ்டாட்டிலும்_ முப்பெரும் கிரேக்கத் தத்துவஞானிகளாவர்.

சிந்தனை ஏன் எனச் சிந்தித்தவர் அரிஸ்டாடில். பாமரனையும் சிந்திக்க வைத்தவர் வேதாத்திரி மகரிஷி.

## அரிஸ்டாட்டிலும் வேதாத்திரி மகரிஷியும் ஒரு பார்வை

அரிஸ்டாட்டில் ஒரு கிரேக்கத் தத்துவஞானி மற்றும் பல்துறை வல்லுநர். வேதாத்திரி மகரிஷி ஒரு இந்திய தத்துவஞானி

அரிஸ்டாட்டில், வேதாத்திரி மகரிஷி எழுத்துக்களில் இயற்பியல், கவிதை, நாடகம், இசை, தர்க்கம், சொல்லாட்சி, மொழியியல்,

அரசியல், ஒழுக்கவியல், பரிணாமம், கடவுள் தத்துவம் என்று பன்முகப் பார்வை இடம் பெற்றிருக்கும்.

பிளேட்டோவும், அரிஸ்டாட்டிலும் மேலைத்தேசச் சிந்தனையில் மிகஅதிக செல்வாக்குச் செலுத்தும் இருவராகக் கருதப்படுகிறார்கள்.

வேதாத்திரி மகரிஷி கிழை நாட்டுச் சிந்தனையில் மட்டுமல்ல உலகளாவிய சிந்தனைகளில் அதிக செல்வாக்குப் பெற்றவராகத் திகழ்கிறார்.

அரிஸ்டாட்டில் மேற்கத்திய தத்துவத்தின் மிக முக்கியமான நிறுவனர் ஆவார்.

அரிஸ்டாட்டிலின் படைப்புக்களே மேற்கத்திய தத்துவம்,

ஒழுக்கவியல், அழகியல், தர்க்கம், அறிவியல், அரசியல் ஆகியவற்றின் ஒரு முதல் விரிவான அமைப்பை உருவாக்கின. அரிஸ்டாட்டிலின் இயற்பியல் கருத்துக்கள், ஆழ்ந்த அறிவைத்தரும் இடைக்கால வடிவ இயற்பியல் கோட்பாடுகளாக அமைந்தன.

நியூட்டனின் இயற்பியல் தத்துவங்கள் அரிஸ்டாட்டில் தத்துவத்தின் ஒரு நீட்ச்சியே ஆகும்.

அரிஸ்டாட்டிலின் அவதானிப்புகள் விலங்கியல் அறிவியலைப் பொருத்தவரை துல்லியமான இருப்பதை, 19 ஆம் நூற்றாண்டில் அறிவியலாலர்கள் உறுதி செய்துள்ளனர்.

அரிஸ்டாட்டிலின் தத்துவங்கள் நவீன முறைப்படி பத்தொன்பதாம் நூற்றாண்டில் இணைக்கப்பட்டன. சாக்கிரட்டீசும் பிளேட்டோவும், அரிஸ்டாட்டிலின் குரு.

சாக்கிரட்டீசின் சிந்தனைகள் மற்ற இருவரின் மீதும் ஆழமான தாக்கம் கொண்டிருந்தன. மாவீரன் அலெக்சாண்டர் இவருடைய சீடர் ஆவார்.

அரிஸ்டாட்டிலின் தத்துவங்கள் இடைக்காலத்திய இஸ்லாமிய மற்றும் யூத மரபுகளில் தத்துவ மற்றும் இறையியல் சிந்தனையில் ஒரு ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தின.

அதுவும் குறிப்பாக கிருஸ்துவர்களின் இறையியலில் அவரின் தாக்கம் அதிகமாக இருந்தது..

அரிஸ்டாட்டில் எழுதிக்குவித்த நூல்களின் எண்ணிக்கை 170 என்று ஒரு பண்டையப் பட்டியல் கூறுகிறது.

அரிஸ்டாட்டிலின் சிந்தனைகள் தமிழ்,ஆங்கிலம்,லத்தீன், சிரியாக், அராபிக், இத்தாலியன், பிரெஞ்ச், ஹீப்ரு, ஜெர்மன் போன்ற பல உலக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

வேதாத்திரி மகரிஷி இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட கவிதைகளையும் என்பதுக்கும் மேற்பட்ட நூல்களையும் படைத்துள்ளார். இவரது சொற்பொழிவுகள் இணைத்தில் உலா வந்து கொண்டிருக்கின்றன.

அரிஸ்டாட்டில் என்றால் "சிறந்த நோக்கம்," என்று பொருளாகும். இவர் ஸ்டகிரா, ஷல்சிடிஸில் கி.மு. 384 இல் பிறந்தார்.

தற்கால தெஸாலோனிகியில் இருந்து 55 கி.மீ. (34 மைல்) கிழக்கே. அவரது தந்தை நிகோமசுஸ், மாசிடோனியாவின் மன்னர் அமயின்டாஸின் தனிப்பட்ட மருத்துவர் ஆவார்.

வேதாத்திரி மகரிஷி தென் இந்தியாவின் தமிழகத்தில் கூடுவான்சேரியில் 14-08-22ல் பிறந்தார். இவரின் தந்தை ஒரு நெசவாளி.

அரிஸ்டாட்டிலின் குழந்தை பருவத்தைப் பற்றி அதிக தகவல்கள் இல்லை என்றாலும், ஒருவேளை அவர் மாஸிடோனியன் மாளிகையில் சிறிது காலம் கழித்திருப்பார் என்று வரலாற்று ஆய்வாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.




பதினெட்டு வயது நிரம்பிய அரிஸ்டாட்டில் பிளேட்டோவின் அகாடமியில் அவரது கல்வியை தொடர ஏதென்ஸ் சென்றார்.

அரிஸ்டாட்டில் பிளேட்டோ வழிவந்த சிந்தனைச் செம்மல். பிளேட்டோ விட்டுச் சென்ற பணிகளை நிறைவேற்றிய தர்க்கமேதை. பிளேட்டோவிற்கு வயது அறுபது;

அப்போது அவரது அகாதெமி (□□□□□□□□) எனும் பள்ளியில் ஆர்வமுடன் பயிலவந்த மாணவன் அரிஸ்டாட்டிலுக்கு வயது பதினேழு.

கற்பதில் ஆர்வமும் இளமைத் துடிப்பும் கூரிய விழிகளும் தெளிந்த பார்வையும் கட்டமைப்பான உடல்வளமும் – தீர்க்க சிந்தனையும் – அறிவு நுட்பமும் கொண்ட இளைஞன் அரிஸ்டாட்டில் தம் தகுதிகளால் பிளேட்டோவைக் கவர்ந்தார்.

பிளேட்டோவின் பள்ளியில் கற்பதற்காக அரிஸ்டாட்டில் தம் பெயரைப் பதிவு செய்தார். அப்பதிவு பிளேட்டோவின் வாழ்வில் ஒரு திருப்பு முனையாயிற்று.

அரிஸ்டாட்டிலின் அறிவாற்றலால் ஈர்க்கப்பெற்ற பிளேட்டோ, அவரைத் தம் கல்விக் கூடத்தின் மூளை (Mind of the Achademy) என்றே குறிப்பிட்டுள்ளார்.

பிளோட்டோ, தமது இளம் சீடனின் அறிவுக் கூர்மையை விரைவிலேயே உணர்ந்து கொண்டார்.

புத்தகங்களை வாங்கி வாங்கிச் சேர்த்து வைத்துப் படிப்பதில் அரிஸ்டாடிலுக்கு தீராத ஆசை. அவர் இல்லமே, "படிப்பின் உறைவிடம்" என்று பிளோட்டோ கூறியிருக்கிறார்.

அரிஸ்டாடிலும் தன் ஆசிரியரின் புகழையும், மேதா விலாசத்தையும் உணராமலில்லை. ஆனால் "குரு சொல்வதே வேதவாக்கு" என்ற எண்ணம் மட்டும் மாணவனிடம் இல்லை.

"ஞானம் என்பது பிளேட்டோவுடன் அஸ்தமித்து விடும் என்று மட்டும் சொல்லிவிடக் கூடாது" என்று அவர் கூறினாராம்.

பிளேட்டோவுக்கு இதில் வருத்தம்தான். "கன்று தன் தாயின் மடியிலுள்ள பால் முழுவதையும் குடித்து விட்டு அதை எட்டி உதைக்கச் தான் செய்யும்" என்றாராம் அவர்.

இந்த மனவேறுமையில் ஆச்சரியமே இல்லை. தேர்ந்த அறிஞர்கள் அருகருகே இருப்பது, வெடி மருந்தும் நெருப்பும் போலத்தான். குருவை மிஞ்சிய சீடர்களும் உண்டு.

அரிஸ்டாட்டில் கி.மு. 348/47 ஏதென்ஸ் விட்டு செல்வதற்கு முன் ஏறத்தாழ இருபது ஆண்டுகள் அகாடமியில் கல்வி கற்றார்..

கி.மு. 347 ஆம் ஆண்டில் பிளேட்டோ மறைந்தார்; அவரது மறைவிற்குப் பின்னர் அவரது கல்விக் கூடத்தின் ()

தலைமைப் பதவி ஏதன்ஸ் நகர விதிமுறைகளின்படி அவரது சகோதரியின் மகன் ஸ்பெசிப்பஸ் (□□□□□□□□□□□) என்பவர் வசம் சென்றது.

அதனால் அரிஸ்டாட்டில் பிளேட்டோவின் வழிவந்த ஜெனோகிரேட்டீஸ் (□□□□□□□□□□□) துணையுடன் அஸ்செஸ் (□□□□□) என்ற நகர் சென்று அந்நகரில் செல்வ வளம் மிக்க ஹெர்மியாஸ் (□□□□□□□) என்ற இளவரசரைச் சந்தித்தார்.

அவரது சகோதரியின் மகளைத் திருமணம் செய்து கொண்டார். அவரது துணையுடன் மாசிடோனியாவை ஆண்ட மன்னன் பிலிப்ஸ் என்பவரைச் சந்தித்தார்.

அதற்கு அடுத்த ஏழு ஆண்டுகள், தான் சந்தித்த அந்த மன்னனின் மைந்தனுக்கு (மகன்) கல்வி கற்றுத் தந்து உலக வரலாற்றில் உன்னத இடம்பெற்றார்.

இவர் கல்வி கற்றுத் தந்த இளைஞன் வேறுயாருமல்ல; உலகப் புகழ்பெற்றவரும், மாசிடோனிய நாட்டின் பெருமையை நிலைநாட்டிய பேரரசரும் அஞ்சா நெஞ்சம் கொண்டவரும் ஆகிய அலெக்சாண்டர் ஆவார்..

அரிஸ்டாட்டில் மாசிடோனியா ராயல் அகாடெமியின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

கி.மு. 335 அவர் ஏதென்ஸ் திரும்பினார், அங்கு லைசியம் என தனது சொந்த பள்ளியை நிறுவினார். அரிஸ்டாட்டில் அடுத்த பன்னிரண்டு ஆண்டுகள் அங்கு பள்ளியில் படிப்புகளை நடத்திக்கொண்டிருந்தார்.

தம் மாணவர்க்கு மெய் விளக்கியல் கொள்கைகளைக் கற்பிப்பதற்காக ஏதென்ஸ் நகரத்திலிருந்த ஒரு தோட்டத்தில் இதை அவர் நிறுவினார். இதற்கு உலாப் பள்ளி என்ற பெயரும் உண்டு.

அரிஸ்டாட்டில் இங்கு உலாவிக் கொண்டே பாடம் சொல்வது வழக்கமாக இருந்ததால் இப்பெயர் ஏற்பட்டது என்பர். ஏதென்ஸில் அரிஸ்டாட்டில் இருந்த போது, அவரது மனைவி பிதியாஸ் இறந்தார்.

அரிஸ்டாட்டிலின் பல படைப்புகள் இயற்றப்பட்டது அவர் ஏதென்ஸில் இருந்த கி.மு. 335 முதல் 323 வரையான காலகட்டத்தில் என்று நம்பப்படுகிறது.

அலெக்ஸாண்டர் இறந்த அதே ஆண்டில் இயற்கை காரணங்களால் இயுபோஇயா வில் அரிஸ்டாடில் இறந்தார்.( இறப்பு- கிமு 322 (வயது 61 அல்லது 62)

அரிஸ்டாட்டிலிற்கு அடுத்து அவரது மாணவர் ஆன்டிபாத்தரர் அவரின் இடத்திற்கு வர வேண்டும் என்றும் அவரது மனைவிக்கு அடுத்து புதைக்கப்பட வேண்டும் என்றும் ஒரு உயில் விட்டு சென்றாராம் அரிஸ்டாட்டில்.

அலெக்சாந்தர் தன் ஆசிரியரின் ஆராய்ச்சிகளுக்குத் தேவைப்பட்ட நிதி உதவிகள் அனைத்தையும் தாராளமாக வழங்கினார்.

ஒரு விஞ்ஞானி தம் ஆராய்ச்சிக்காக அரசிடமிருந்து பெருமளவில் நிதியுதவி பெற்றது உலக வரலாற்றில் இதுவே முதல் நிகழ்ச்சி ஆகும்.

ஆனால்,அலெக்சாந்தருடன் அரிஸ்டாட்டிலும் கொண்டிருந்த தொடர்புகள் சில ஆபத்துகளையும் தோற்றுவித்தன.

அலெக்சாந்தரின் சர்வாதிகார முறை ஆட்சியை அரிஸ்டாட்டில் கொள்கையளவில் எதிர்த்தார். அரசு துரோகக் குற்றம் செய்ததாக ஐயத்தின் பேரில் அரிஸ்டாட்டிலின் மருமகனை அலெக்சாந்தர் தூக்கிலிட்டார்.

அரிஸ்டாட்டிலின் மக்களாட்சி ஆதரவுக் கொள்கையை அலெக்சாந்தர் விரும்பவில்லை. அதே சமயத்தில் அவர் அலெக்சாந்தருடன்

நெருக்கமாகத் தொடர்பு கொண்டிருந்தமையால் ஏதென்ஸ் மக்களும் அவரை நம்பவில்லை. அதன் பின் அவர்கள் பிரிந்தனர்.

## குருவும் சீடரும்

குருவும் சீடனும் எப்படி வாழந்திருப்பார்கள்? குருவோ தத்துவஞானி, அறுபதாண்டு கடந்தவர். சீடன், விஞ்ஞானத்தில் அதாவது, எதையும் கண்டு, ஆராய்ந்து தெளிந்து ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற தர்க்க மனப்பான்மையில் பற்றுக் கொண்ட காளை.

பிளேட்டோ தாம் கண்ட உண்மைகளை உள்ளபடியே ஏற்றுக் கொள்ளும் இயல்பினர் (□□□□□□□□□□); ஆனால், அரிஸ்டாட்டில் தாம் கண்டவற்றில் ஏற்புடையது எது? நடைமுறைக்கு ஏற்றது எது? என்று ஆய்ந்து, பின்னர் சரியானவற்றை ஏற்றுக் கொள்ளும் தன்மையர் (obj ecti ve).

பிளேட்டோ ஆரம்பித்தது பல்கலைக்கழகம்; ஆனால், அரிஸ்டாட்டில் ஆரம்பித்தது நடமாடும் பல்கலைக்-கழகம்.

இவ்விருவரும் - ஏசுகிறித்து பிறப்பதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே உலகில் கல்விக்கண் திறந்த சிந்தனையாளர்கள்.

ஆடவருடன், மகளிரும் சமமாகக் கல்வி கற்க அடித்தளம் அமைத்த மாண்பினர். அவர்கள் காட்டிய வழியில்தான் இன்றைய உலகம் சென்று கொண்டிருக்கிறது. உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு என்பதே இவர்கள் காட்டிய கொள்கை.

அரிஸ்டாட்டில், பிளேட்டோ,சாக்கிரட்டீஸ் ஆகிய மூவரும் ஆசிரியர் மாணவர்கள் போன்றவர்கள். ஆனால் இவர்கள் மூவரும் ஒன்றாக இருப்பது போல் ஒரு ஓவியம் வாட்டிகன் மியூசியத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் சென்னைக்கு அருகில் உள்ள கூடுவாஞ்சேரி என்னும் கிராமத்தில் செங்குந்த கைக்கோளர்

மரபில் நெசவுத் தொழில் செய்யும் வரதப்ப முதலியார், முருகம்மாள் (சின்னம்மாள்) தம்பதியர்களுக்கு எட்டாவது குழந்தையாகப் பிறந்தார்.

சிறுவயது முதலே வேதாத்திரி மகரிஷி அவரது தாயார் சின்னம்மாளிடம் நிறைய பக்திக் கதைகளையும், புராணக் கதைகளையும் அறிந்து கொண்டார்.

இவரது குடும்பச் சூழலில் இவருக்கு அதிகம் படிக்க வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. தன்னுடைய சொந்த ஊரில் மூன்றாவது வகுப்பு வரை படித்த இவர், பின்னர் தங்கள் குடும்பத் தொழிலான தறி நெய்தலைச் செய்யத் தொடங்கினார்.

18ஆவது வயதில் சென்னையில் தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் வாய்ப்பு இவருக்கு ஏற்பட்டது.

சென்னையில் இவருக்கு ஆயுர்வேத மருத்துவர் எஸ். கிருஷ்ணாராவின் நட்பு கிடைக்க, அவர் மூலமாக தியானம், யோகா போன்றவைகளைக் கற்றார் மகரிஷி.

தனது வாழ்க்கையின் குறிக்கோளாகிய முழுமையை உணரும் நோக்கத்தால்உந்தப்பட்டு; சித்த, ஆயுர்வேத மற்றும் ஹோமியோபதி போன்ற மருத்துவ துறைகளைக் கற்றுத் தேர்ச்சி பெற்றார்.

மேலும் இரண்டாவது உலகப் போரின் போது முதலுதவிப் பயிற்சியாளராகவும் பணிபுரிந்தார்.

பின்பு பொருளாதாரத் தன்னிறைவு பெற வேண்டும் என்று, தனது சுய முயற்சியினால் பல்லாயிரம் நபர்களுக்கு வேலை அளிக்கக்கூடிய அளவிற்கு ஒரு பெரிய நெசவுத் தொழிற்சாலையை உருவாக்கினார்.

அச்சமயத்தில் அரசாங்கத் தொழிற்கொள்கை மாற்றம் காரணமாக வியாபாரம் திடீர் சரிவு நிலையை அடைந்தது; இருப்பினும் தன்னிடம் பணிபுரிந்த 2000 குடும்பங்களையும் காப்பாற்றுவதற்காக ஈட்டிய பொருள் அனைத்தையும் அவர்களுக்கே செலவழித்து அனைத்துப் பொருள் வளத்தையும் இழந்தார்.

அப்படியிருந்தும் மனத்தைத் தளரவிடாது மீண்டும் கடுமையாக உழைத்து படிப்படியாக பொருளாதாரத்தில் தன்னை மேம்படுத்திக் கொள்ள அரிசி வியாபாரம் போன்ற பல்வேறுபட்ட தொழில்களைச் செய்து தனக்கும், தன்னைச் சுற்றியுள்ளவர்களின் துன்பத்தைப் போக்கவும் பாடுபட்டார்.

தன் இரண்டு மனைவியருடைய மனத்தையும் நன்கு புரிந்தவராய் இருவரிடமும் பிணக்கின்றி அன்புடன் வாழ்ந்து காட்டினார்.

வறுமையிலேயே வாழ அடியெடுத்து வைத்த அவரது உள்ளத்தில்

- வறுமை என்றால் என்ன?
- கடவுள் என்பது எது?
- அதை ஏன் காண முடியவில்லை?
- மனித வாழ்க்கையிலேயே ஏன் துன்பங்கள் தோன்றுகின்றன

போன்ற கேள்விகள் அவ்வப்போது ஒலித்துக் கொண்டே இருந்தன.

இவற்றிற்கு காரணங்கள் கண்டு தெளிவு பெறுவதற்காக ஆராய்ச்சியிலும் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார். விளைவாக தனது 35வது வயதில் தன்னிலை விளக்கமாக இறைநிலையை உணர்ந்தார்.

அதன் அடிப்படையில் உலக மக்களுக்காக அவர் அளித்த வாழ்க்கை நெறியே **மனவளக்கலை** ஆகும்.

46 ஆம் அகவையில் உலக அமைதிக்காக 'உலக சமாதானம்' □□□□□ □□□□□ என்ற 200 பாடல்கள் நூலை எழுதி 1957ல் வெளியிட்டார்.

இந்த இருமொழிகள் (தமிழ், ஆங்கிலம்) நூலை பாடத்திட்ட வழி பள்ளி, கல்லூரிகளில் பரப்ப வாழ்நாள் இறுதிவரை உழைத்து வெற்றி பெற்றார்.

இன்று 30க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பு, மேல்பட்டப்படிப்பு, ஆராய்ச்சிப்படிப்பில் பலர் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது ஆன் லைன் வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன.

*அன்பொளி* என்னும் ஆன்மீக இதழ் ஒன்றையும் வெளியிட்டார். இன்றும் தமிழ், ஆங்கிலம் மொழிகளில் வெளிவருகின்றன.

வேதாத்திரி அவர்கள் தனது 95வது வயதில் மார்ச் 28, 2006 செவ்வாய்க்கிழமையன்று மறைந்தார்.

## உடல் ஆரோக்கியமே முக்கியமானது

"காதலைவிட, உடல் ஆரோக்கியமே முக்கியமானது." – அரிஸ்டாட்டில்

உடல் நலமே முதல் நலம் என்பது வேதாத்திரியம்

உடலோம்பல் இறைவழிபாடு என்கிறது வேதாத்திரியம்

இவ்வளவு சாப்பிட்டால் போதும், நன்கு ஜீரணமாகும். உடல் நன்றாக இருக்கும் என்று தெரிந்து அளவோடும், முறையோடும் சாப்பிடுவோம்.

ஆனால், சுவையாக இருக்கிறது என்று அதிகமாகச் சாப்பிட்டால் அதை ஜீரணிப்பதற்கு வேண்டிய அதிகப்படியான அமிலம் எங்கிருந்து சுரக்கும்?

பற்றாக் குறையின் காரணமாக உணவு செரிக்காமல் தேங்கிப் போவதால் புளித்துப் போகிறது. அது வயிற்றில் புண்ணை உண்டாக்கித் துன்பம் தருகிறது.

மனிதன் அறியாமையால் செய்யும் தவறுகள் தான் துன்பமாக விளைகிறது. இறையின் ஆற்றலால் எல்லாம் சரியாக நடக்கிறது.

ஆனால், நாம் ஆசையினால், மறதியினால், இறைவனின் செயலை மறந்ததினால் அதிகமாகச் சாப்பட்டோம்.


இறைவன் செயலில் குறுக்கிட்டோம். உறுப்புக் கெட்டுவிட்டது. அதன் விளைவாகத் துன்பத்தை அனுபவிக்கிறோம்.

இறையருள் எல்லாச் செயலிலும் கலந்து சரியான பலனைத் தந்து கொண்டே இருக்கிறது.

நாம் அதைத் தடுத்தால் அந்தத் தடைக்குத் தகுந்தவாறு துன்பம் வரும். இதைத் தெரிந்து கொண்டால் இறைவனுக்குப் பயந்து நடக்க வேண்டுமென்று முன்னோர்கள் சொன்னது தவறா?

தவறாகச் செய்தால் துன்பந்தான் வரும். சரியாகச் செய்தால் இன்பமே நிலைக்கும். இந்த உண்மையைத் தெரிந்து கொள்கிறபோது இறையுணர்வு வருகிறது.

அதற்கு ஏற்றவாறு இந்த உடலுக்கு உணவு, ஓய்வு, உடலுறவு, எண்ணம், உழைப்பு இந்த ஐந்தையும் அலட்சியம் செய்யாமல், அதிகமாக அனுபவிக்காமல், முரணாக அனுபவிக்காமல் நாம்



பார்த்துக் கொள்வோம்.

உடல் நலமாக இருக்கும். மனமும் அமைதியாக இருக்கும். அப்படி அறிவின் தெளிவோடு உடலை நலமாக வைத்துக் கொள்வதும் இறை வழிபாடு தானே?

# சிந்தனை ஏன்?

"உயிரினங்களில் மனிதனே சிறந்தவன்..
அவனது சிந்தனை திறன்தான்
அந்த சிறப்பினை அவனுக்கு
அளிக்கிறது.!" – அரிஸ்டாடில்

மனிதன் தோன்றி சுமார் பத்து லட்சம் ஆண்டுகள் ஆகின்றன. எழுதும் கலை தோன்றிச் சுமார் ஆறாயிரம் ஆண்டுகள் இருக்கலாம்.

எழுதும் கலை தோன்றிச் சுமார் முப்பது நூற்றாண்டுகள் கழிந்த பிறகு, சிந்தனைகள் தோன்றலாயின. தோன்றியவை வளர்ந்து, பெருகிக் கப்பும் கிளையுமாகச் செழித்து அடர்ந்து வளர்ந்தன.

மனிதன் சிந்திக்கத் தொடங்கியது முதல் மக்களது நடவடிக்கைகள், அறிஞர்களின் சிந்தனைப் போக்கை ஒட்டியே இருந்து வந்திருக்கின்றன.

முற்காலத்திலும் சரி, தற்காலத்திலும சரி! இந்த உண்மை பொருந்தும்.

ஒரு நாட்டைப பற்றியோ அல்லது ஒரு குறிப்பிட்ட சகாப்தத்தைப் பற்றியோ அறிந்து கொள்வதற்கு அந்த மக்களுடைய தத்துவத்தையும் சிந்தனைகளையும் அறிந்து கொள்ளத்தான் வேண்டும்

உலகின் சிந்தனையாளர்கள் பலரையும் பற்றிப் படித்து அறிந்து கொள்வதால் புரிந்து கொள்ளவதால் உணர்ந்து கொள்வதால் நாம் நமது கருத்துக்களின் மேல் வைத்திருக்கும் பிடிவாதப் பிடிப்பும் தளரும்.

சில கருத்துக்களை நாமனைவரும் ஒப்புக் கொண்டு, அவைதான் பொது அறிவு என்று சொல்லுகிறாம்.

மற்றவர்கள் வேறு கருத்துக்கள் கொண்டிருக்கலாம் என்றும், நமது கருத்துக்களே ஒரு காலத்தில் சிந்தனையாளர்களின் வெறும் ஊகமாகத்தான் இருந்தவை என்றும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். சமாதானத்தின் முதல்படியே அதுதான்.

உலகில் முதன் முதலில் சிந்தனை உரிமைக்கு வித்திட்டவர் சாக்ரடீஸ்.

எமனுக்குத் தத்தம் செய்யப்பட்ட நசிகேதன், எமனிடமே கேள்வி கேட்டது போல, பல புராதன தர்மவாதிகளையும் பல கடவுளர்களையும் நோக்கி, ஒரே கடவுள் யார்? எனக் கேள்வி கேட்டார் சாக்கரட்டீஸ்.

உலகம் அறியாமையால் இருண்டு கிடந்த போது, இடி, மின்னல், பூகம்பங்களைக் கண்டு ஜனங்கள் மிரண்டு, கல்லை, மண்ணை, கண்டவைகளையெல்லாம் கடவுளர்களாகக் கருதி – அன்பு மயமான ஆத்மார்த்தப் பக்திக்குப் பதிலாக மிருகப் பிராந்தியமான பய பக்தி கொண்டு மூட நம்பிக்கைகளில் மூழ்கினர்.

இயற்கையின் ஆச்சரியங்களைக் கண்டு மலைத்து நின்ற அந்த அநாகரிக காலத்திலே, ஆச்சரியக் குறிகளுக்குக் கேள்வி குறி போட்டார் சாக்ரடீஸ். "நம்பிக்கை மட்டும் போதாது. சிந்திக்கவும் வேண்டும்" என்றார்.

அதற்காக அவரை நாஸ்திகர் எனக் குற்றம் சாட்டி, மக்களின் நீதி மன்றத்தில் நிறுத்தி, மரண தண்டனை விதித்து, விஷக் கோப்பையைப் பரிசளித்தது புராதன தர்மம். குடியாட்சிப் போர்வையிலே!

சிந்திப்பதும் சிந்திப்பதைச் சொல்வதும் ஒவ்வொரு தனி மனிதனின் பிறப்புரிமை என்று சொன்னார் சாக்ரட்டீஸ்".

சுமார் இரண்டாயிரத்து நான்கு நூறு ஆண்டுகளுக்கு முன் தோன்றிய அரிஸ்டாடிலின் சிந்தனைகள் உலக வளர்ச்சிக்கு உரமாக விளங்கின.

நவீனச் சிந்தனையாளர்கள் உட்பட அனைவருக்குமே அவர் துருவ நட்சத்திரமாக விளங்கி வருகிறார். சிந்தனை ஏன் என்பதைப பற்றியும் சிந்தித்த மாபெரும் சிந்தனையார் அவர்.

சிந்தனை ஏன் என்று சிந்தித்தவர் அரிஸ்டாடில். பாமரனையும் சிந்திக்க வைத்தவர் வேதாத்திரி மகரிஷி

"சொல்லால் மட்டும் நம்பாதே.
சுயமாய்ச் சிந்தித்தே தெளிவாய்" (ஞானக்களஞ்சியம் பாடல் 2)

சிறுவயதிலேயே சிந்திக்க ஆரம்பித்தவர் அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி.

வறுமை என்றால் என்ன? கடவுள் என்பது எது? அதை ஏன் காண முடியவில்லை? மனித வாழ்க்கையிலேயே ஏன் துன்பங்கள் தோன்றுகின்றன போன்ற சிந்தனைகள், கேள்விகள் அவ்வப்போது ஒலித்துக் கொண்டே இருந்தன.

இவற்றிற்கு காரணங்கள் கண்டு தெளிவு பெறுவதற்காக ஆராய்ச்சியிலும் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார்.

விளைவாக தனது 35வது வயதில் தன்னிலை விளக்கமாக இறைநிலையை உணர்ந்தார். அதன் அடிப்படையில் உலக மக்களுக்காக அவர் அளித்த வாழ்க்கை நெறியே **<u>மனவளக்கலை</u>** ஆகும்.

## வேதாத்திரியம் தரும் சிந்தனைகள்

- சொல்லால் மட்டும் நம்பாதே சுயமாய்ச் சிந்தித்தே தெளிவாய்.
- இறைவனை வணங்குவதைவிட சிந்திப்பதே மேல்.
- சிந்தனையுடன் செயலும், செயலுடன் சிந்தனையும் நிற்கப் பழகுதல் நற்பண்பு
- எந்தக் குறையும உங்கள் செயலின் பதிவே என்று உணர்ந்து ஏற்றுக் கொண்டு சிந்தனையாலும் அறவழியாலும் சீர்செய்ய

முயலுங்கள். உங்கள் குறை தீர்க்க உங்கால் முடியாவிடில் வேற யாராலும் முடியாது.

- தெய்வத்தைப் போற்றி வழிபட்டு வாழ்வோர் சிந்தனையும் மேற்கொண்டால் சிறந்துயர்வார்.
- சினம் அச்சம் ஒழியச் சிந்தனையை ஏற்றி சீவன் நிலைகளை நன்குணர வேண்டும்.
- இன்பத்தும் துன்பத்தும், இயற்கையும் கற்பனையும் சிந்தித்து அறிபவன். சிறப்பாக வாழ்வான்.
- சமுதாயத்தில் உள்ள தனிமனிதனும்,குடும்பங்களும் துன்பங்களையும் சிக்கல்களையும் அனுபவிக்கிறார்களே தவிர இவற்றைப் போக்குவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று சிந்தனை செய்ய யாருக்கும் நேரம் இல்லை.
- விட்டிற்குப் போய் மறுபடியும் எல்லாவற்றையும் சிந்தித்து, உங்கள் வாழ்க்கையில் கொண்டுவந்து. அப்புறம் அதை நாட்டிற்குக் கொடுங்கள்.
- எல்லாம் வல்ல தெய்வமது எங்கும் உள்ளது. நீக்கமற. சொல்லால் மட்டும் நம்பாதே, சுயமாய்ச் சிந்தித்தே தெளிவாய்!

## ஆனந்தம் ஆனந்தம்

மனித வாழ்வின் குறிக்கோள் எது? என்ற பரிசீலனையுடன் தமது நூலைத் தொடங்குகிறார் அரிஸ்டாட்டில்.

அந்தக் குறிக்கோளை வரையறுத்த பிறகு அதை எய்தும் வழிகள் எவை என்பது விரித்துக் கூறப்பட்டுகின்றன. இடையிடையே நீதி, அறம், நட்பு என்பவை போன்ற பண்புகளைப் பற்றிய ஆராய்ச்சி இருக்கிறது. இலட்சிய நடத்தை எது என்ற கற்பனைச் சிந்திரமும் வருகிறது.

நித்திய ஆனந்தமே மனித வாழ்வின் குறிக்கோள் என்பது அரிஸ்டாட்டிலின் சித்தாந்தம்.

"ஆனந்த நிலைக்கு மேலானதொரு இலட்சியம் கிடையாது. அதற்காகவே அதை நாம் நாடுகிறோம்.

ஆனால் இன்பம், கௌரவம், அறிவு போன்றவற்றையெல்லாம் நாம் நாடுவது அவற்றின் மூலம் ஆனந்த நிலை எய்துவதற்காகத்தான்.

### ஆனந்த நிலை என்றால் என்ன?

அரிஸ்டாட்டில் பரிசோதனையாளராதலால், இதைக் கண்டறிவற்கும் ஒருமுறை வகுத்துக் கொள்கிறார்.

மனித வாழ்வின் ஆனந்த நிலை எது என்று அறிய வேண்டுமாதலால் மனிதன் பிற உயிரினங்களிலிருந்து எவ்வாறு வேறுபட்டிருகிறான் என்பதையே அந்த மனிதனுக்குச் சிறப்பாக உள்ள ஆற்றலைப் பூரணமாக வெளிப்படுத்திக் கொள்வதுதான்.

அந்த நிலையின் திறவுகோல்.

மனிதனின் தனிச்சிறப்பு அவனது சிந்தனைத் திறன், அதனால் தான் "அரிதரிது மானிடராய் பிறத்தலரிது" என்ற முதுமொழி பிறந்தது.

அதனால்தான் அவன், தன்னினும் வலிய உயிரினங்களையும் வெற்றி கொண்டு ஆள்கிறான்.

சிந்தனை என்னும் தனிப்பேராற்றல் அவனுக்குச் சிறப்பைத் தந்திருப்பதால் அதன் பூரணவளர்ச்சி அவனுக்கு நித்திய ஆனந்தத்தைத் தரும்.

புவி மீத தெய்வ வாழ்வு வாழ்பவன் சிந்தனையாளனே. அதனால் அவன் தான் வானவருக்கு மிகவும் உகந்தவன். அதனாலேயே அவன் வாழ்வு ஆனந்தமயமாக இருக்கும்.

## ஆனந்தமே பரம்பொருள்

ஆனந்தமே பரம்பொருள். அது யாருக்கும் தனி உரிமையாகாது . அண்டங்கள் அனைத்தும் ஆனந்தத்தில் தோன்றி ஆனந்தத்தில் நிலைத்திருந்து ஆனந்தத்திலேயே ஒடுங்குகின்றன.

“ஆனந்தோ ப்ரஉற்மேதி வ்யஜானாத்!
ஆனந்தாத்த்யேவ கல்விமானி பதானி ஜாயந்தே!
ஆனந்தேன ஜாதானி ஜீவந்தி!
ஆனந்தம் ப்ரயன்த்யபிஸம்விசந்தி!
தைத்தியோசநிஷதம் (3 – 6)

ஆனந்தம் பிரம்மம் என்று சாதகன் ஞானத் தெளிவடைந்தான். ஆனந்தத்திலிருந்தே நிச்சயமாக உயிர்கள் தோன்றியுள்ளன.

பிறந்தவை எல்லாம் ஆனந்தத்திலேயே வாழ்ந்திருக்கின்றன. இறுதியில் ஆனந்தத்திலேயே லயமடைகின்றன.

ஆனந்தத்தை அறியாதார் யார்?

ஆனந்தமில்லாது யார் உயிர் வாழ்ந்திருக்க முடியும்?

ஆனந்தத்தில் ஒன்றுபட்டிருப்பவர் பரமனை அடைந்தவர் ஆகின்றனர்.

பேரின்பமாக விளங்கும் மேலான பொருளான சுத்தவெளியை

ஆனந்தமான பரம் என்று அழைக்கிறார் தாயுமானவர்.

இறைநிலை ஆனந்தமயமானது என்பதை பேரின்ப ஊற்று என்பார் வேதாத்திரி மகரிஷி.

ஆனந்தமான பரம் என்ற தலைப்பிலே தாயுமானவர் 10 பாடல்களை 160 வரிகளில் ஆனந்தமாகப் பாடியுள்ளார். ஒவ்வொரு பாடலின் இறுதியிலும்

அண்டபகி ரண்டமும் அடங்க ஒரு நிறைவாகி
ஆனந்த மானபரமே” (தா.பா.67)

என்று பாடி முடிக்கிறார் தாயுமானவர்.

அண்டங்களும் பேரண்டங்களும் உன்னுள் அடங்குமாறு, ஒப்பற்ற நிறைவாய், பேரின்பமயமாய் விளங்கும் மேலான பொருளே என்று இறைநிலையை தாயுமானவர் போற்றுகிறார். அருட்தந்தை வேதாத்திரி மகரிஷியோ.....

“பேரண்டப் பெருவெளியை நினைக்குந் தோறும்
பெருகிவரும் இன்பத்தை யான் என் சொல்வேன்” (ஞா.க.1419)

என்று பல இடங்களில் “பரம்பொருள் ஆனந்தமயமானது” என்று போற்றுகிறார் மகரிசி.

“இன்ப ஊற்றாய் நிறைந்த இறைவா – எங்கும்
இன்ப ஊற்றாய்ப் பெருகும் இறைவா!
அன்பு ஊற்றாய்ப் பெருகி அனைத்துயிர்க்குள்ளும் அறிவாய்
இன்ப ஊற்றாய் நிறைந்த இறைவா” (ஞா.க.பா.1648–1)

உடல், உயிர் மனம் மூன்றும் ஒன்றிணைகின்றபோது அறிவானது விரிவடைந்து, தன்னிலே எல்லாவற்றையும் எல்லாவற்றிலும் தன்னையும் காணக்கூடிய உணர்வுநிலை பேரின்ப நிலை ஆகும்.

இறைநிலையானது அறிவாக தோற்றங்கள் அனைத்திலும் ஊடுருவி நிறைந்து, ஒன்றோடு ஒன்று இணைத்துக் கொண்டுள்ளது.

அந்த அறிவானது அன்பை ஊற்றுப்போல சுரந்து கொண்டும் பெருகிக் கொண்டும் உள்ளது. பரம் ஆனந்தமாக இன்ப ஊற்றாக உள்ளது என்கிறார் அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி.

இன்பநிலை எய்த வாரீர்! வேதாத்திரியம்

அறிவானது நிறை நிலையை ஆதியாக
  அமைதி நிலையில் உணர்ந்து, அதுவாம் போது
அறிவு உயர்ந்தகன்று, அமைதிப் பேரின்பத்தில்
  அணுமுதலாய் அண்ட கோடி தானேயாக,
அறிவே அவ்வந் நிலையில் ஒழுங்கியக்க
  அமைபாகி, முறைபிறழாது இயங்கும் மேலாம்,
அறிவின் பெருமை உணர்ந்த இன்பவெள்ளத்து
  ஆனந்தத்தில் திளைக்க வாரீர்! வாரீர்! (ஞாக.பா..1236)

ஆனந்தத்தில் திளைக்க ஊரெங்கும் உள்ள மனவளக்கலை மன்றங்களில் பயிற்சி எடுத்து இன்பமாக வாழ்வோமாக.

# வறுமை

“புரட்சிகளுக்கும், குற்றங்களுக்கும் வறுமைதான் தாய் தந்தை” அரிஸ்டாட்டில்

“கடவுளுக்கு உருவமில்லை. வரம்பிலா வலிமையும் நித்தியத்துவமும், சிறப்பும் பெற்றவர் அவர். நமது கண்களுக்குத் தெரியாத அவரை, அவரது செயல்களின் மூலமே நாம் அறிந்து கொள்கிறோம்” – அரிஸ்டாட்டில்

வேதாத்திரி பார்வையில் வறுமை இல்லை.

வேதாத்திரி மகரிஷி தனது நெடிய பயணத்தில் வாழ்க்கை நெறி களை அமைதியாக உணர்த்திச் செல்கிறார்.

விஞ்ஞான வளர்ச்சி பெற்ற இக்காலத்தில் பொருள் வறுமை இல்லவே இல்லை என்கிறார்.

அறிவு வறுமையால், நிரவி வாழாமல் பொருட்கள் தேக்கமும், அவசியமற்ற பொருட்களின் பெருக்கமும், அவசியமான பொருட்கள்

மீது அலட்சியமும் ஏற்பட்டப் பொருள் வறுமை போன்ற ஒரு மாயத் தோற்றம் உருவாகி நிலைத்து வருகிறது.

தெய்வ நிலை அறிவால் ஏன் இந்த நிலைகளைச் சீர்திருத்தி உலக மக்கள் வாழ்வில் வளத்தை ஏற்படுத்தக் கூடாது?

தெய்வத்தை அறிந்து கொண்டால், பல நன்மைகளை உலகுக்குச் சாதித்து விட முடியும். தெய்வ நிலையை உணர்ந்த பிறகுதான் உண்மை விளங்கும்.

எல்லாம் வல்ல முழுமுதற் பொருளான தெய்வமானது கேட்டால் எதையும் கொடுப்பதில்லை. செய்யும் செயலுக்கு ஏற்றபடித்தான் விளைவைக் கொடுக்கிறது.

நோக்கம், திறமை, காலம், இடம், தொடர்பு கொள்ளும் பொருள் அல்லது நபர் இவ் வையகத்துக்கும் ஏற்ப, ஒவ்வொரு செயலிலும் தக்கபடிச் சிறிது கூடத் தவறாத நீதியோடு விளைவைத் தெய்வம் கொடுக்கிறது.

ஆகவே இந்தத் தெய்வ நீதியைக் கொண்டு மக்கள் குலத்திற்கு என்னென்ன தேவையோ அவற்றையெல்லாம் உற்பத்தி செய்து கொள்ள முடியும்.

எனவே. பொருள் வறுமை என்பது கிடையவே கிடையாது. அறிவு வறுமைதான் இருக்கிறது. இதை ஒழித்தால் போதும் பொருள்வளம் மிகுந்துவிடும்.

ஏழையாக இருப்பது பாவமன்று. ஏழ்மையைத் துன்பமாக, துயரமாக வளர்த்துக் கொள்வது தீது.

"சோம்பேறியாக இருந்தால் வறுமைதான் கிட்டும்''

சோம்பலால் வறுமையில் வாடிய ஒருவன் ஒருமகானைச் சந்தித்து, தனது வறுமையைப் போக்கும்படி வேண்டினான்.

அவனது சோம்பலை உணர்ந்த அந்த மகான் அவனுக்கு அதை உணர்த்த ஒரு கதையைக் கூறினார்–

ஒரு மரங்கொத்திப் பறவை, தன் கூரிய அலகால் டொக் டொக்கென்று மரத்தைக் கொத்திக் கொண்டே அந்த மரத்தின் மேல் தாவித் தாவி ஏறியது.

அதைப் பார்த்த ஒரு மனிதன், ""மூடப் பறவையே, எதற்காக மரம் முழுவதையும் கொத்திக் கொண்டிருக்கிறாய்? இது வீண் வேலையல்லவா?'' என்று கேட்டான்.

அதற்கு அந்தப் பறவை, ""மனிதனே நான் என் உணவைத் தேடுகிறேன். தேடினால் கிடைக்கும்...'' என்றது.

அவன் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, தொடர்ந்து மரத்தைக் கொத்தி, மரத்தில் ஓட்டை போட்டு, அதற்குள் பதுங்கியிருந்த புழுக்களை எடுத்து உண்ண ஆரம்பித்தது.



தனது உணவைச் சாப்பிட்டு முடித்த பிறகு, அந்த மனிதனைப் பார்த்து, ""மனிதனே, நீயும் தேடு... மரத்திலும், மண்ணிலும், நீரிலும் ஏன் எல்லா இடங்களிலும் தேடு. உனக்கும் ஏதாவது கிடைக்கும்'' என்றது.

கதையைச் சொல்லி முடித்த மகான், ""நீயும் இந்தப் பரந்த உலகத்தில் தேடு. உனக்கும் ஏதாவது கிடைக்கும். சோம்பேறியாக இருந்தால் வறுமைதான் கிட்டும்'' என்றார்.

ஏழ்மையில் காரணத்தை அறிந்து கொண்டு அறிவார்ந்த நிலையில் மாற்ற முயற்சி செய்தால் ஏழ்மை மாறும்!. முயன்றால் ஏழைகளால் எதையும் செய்ய இயலும். ஏழைகளால் செய்ய இயலாது என்ற ஒன்று இல்லை. பாரதியாரும்,

கஞ்சி குடிப்பதால் கில்லார் – அதன்
காரணங்கள் இவை யெனும் அறிவு மிகல்லார்”

என்று கூறியது போல், இன்றைய ஏழைகள் கஞ்சியில்லாமல் இருப்பதற்குரிய காரணத்தை அறிந்து கொள்ளவில்லை.

அறிந்து கொள்ளாதது மட்டுமன்று, தங்கள் ஏழ்மைக்குக் கடவுளும் விதியும் காரணம் என்று பிழை படக் கருதிக் கொண்டிருக்கிறார்கள். இது முற்றிலும் தவறு.

அண்ணல் இராமபிரான், இலக்குவன் அமைத்த பர்ணசாலையைக் கண்டு வியந்த போது,

தா இல் எம்பிகை சாலை சமைத்தன
யாவை, யாதும் இலார்க்கு இயையாதவே.”

நமது நாட்டில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களுக்கு இந்தத் துணிவு வரவேண்டும். வரவழைக்கப்பட வேண்டும். அன்றே நமது நாடு வளரும் .

இந்த நாட்டில் ஒவ்வொரு மனிதனும் தற்சார்படைய பொருளாதார வசதி பெறுதல் வேண்டும். சார்ந்து வாழ்தல் தீது.

சுரண்டும் பொருளாதரச் சமுதாயம் அறவே கூடாது. நாடும் நாடாவளத்தனமவாக வளர வேண்டும். அந்நிய மூலதனத்தின் சந்தை நாட்டின் வளர்ச்சிக்கு உதவாது.

சுதந்திரத்திற்கும் பாதுகாப்பு இல்லை. அந்நிய மூலதனம் ஊளைச் சதை போலத்தான். ஆதலால், கம்பனின் கருத்துப்படி ஏழ்மை அழிவுக்குரியதல்ல. ஆக்கந்தரும் உந்து சக்தி என்பதை உணர வேண்டும்.

மனித வரலாற்றில் வேறெந்த காலத்தையும் விட மனிதகுலம் இப்போது மிகவும் ஆக்கபூர்வமாக இருப்பதோடு, அது வறுமை மற்றும் தேவைகளைக் களைந்தெறிவதற்கு முற்றிலும் தகைமை பெற்றுள்ளது.

ஆனால் இந்த உற்பத்தி சக்திகள் பெருநிறுவன மற்றும் நிதியியல் செல்வந்த மேற்தட்டுகளின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டு, சர்வதேச தொழிலாள வர்க்கத்தால் ஒரு ஜனநாயக மற்றும்

விஞ்ஞானபூர்வ முறையில் ஒழுங்கமைக்கப்பட்டால் மட்டுமே இது சாத்தியமாகும்.

# மனமே எல்லாம்

“மனதின் ஆற்றலே வாழ்க்கையின் சாராம்சம்” – அரிஸ்டாடில்

மனம் தான் மனித வாழ்க்கையின் விளை நிலம் என்கிறது வேதாத்திரியம். மேலும் சொல்கிறது... . . . . .

- மனதின் தன்மை எதுவோ அதான் மனிதனுடைய தன்மை.
- மனதின் உயர்வு எதுவோ அதுவே மனிதனின் உயர்வும்.
- மனம், இயற்கை. சமுதாயம் என்ற முக்கோணத்துக்குள்தான் மனிதன் வாழ்ந்தாக வேண்டும்.
- மனம் தூய்மை அடைந்தால் அந்த வினாடியே இறையுணர்வு கிட்டும்
- மனதை அடக்கிவிட்டால் மட்டில்லா இன்பம்
- மனமே மனிதனின் மாபெரும் நிதி
- மனம், இதன் மனிதன் – மனம் இதயமானவனே மனிதன்.
- மனமானது உயிர், உடல் இவற்றோடு எந்த அளவுக்கு ஒற்றுமையாக இயங்குகின்றதோ அந்த அளவுக்குத்தான் மனிதனின் அமைதி நிர்ணயிக்கப்படுகிறது.
- உயிருணர்வில் பெற்ற அறிவைக் கொண்டு பிரபஞ்ச மொத்தத்தையும் அறியலாம். ஏனெனில், சிவனே சீவனாயிற்று. சீவனே மனம் ஆயிற்று. அதாவது சிவனே மனமாக இருக்கிறது.
- மனதை விட பெரிய பொருள் இந்தப் பிரபஞ்சத்திலேயே இல்லை. ஏனெனில் மனதைக் கொண்டுதான் மனதையும் அறியமுடியும். விஞ்ஞானத்தால் எவ்வளவோ கருவிகளைக் கொண்டும் அறிய முடியாத பிரபஞ்ச ஆற்றலாகிய இறைவெளியைக்கூட மனம்தான் யூகித்துணருகிறது. (வேதாத்திரி மகரிஷி பொன்மொழிகள் 5000)

# கல்வி கல்வி கல்வி

"கல்வியின் வேர்கள் மிகவும் கடினமானது, ஆனால் அதன் பழம் இனிமையாது." – அரிஸ்டாட்டில்

"குழந்தைகளுக்கு கல்வி புகட்டுவோர்
பெற்றோர்களை விட
பெருமதிப்புக்கு உரியவர்கள்..
பெற்றோர்கள் உயிர் மட்டுமே அளிக்கிறார்கள்..
ஆசிரியர்கள் தான்
நல்வாழ்வு வாழும் கலையை
கற்றுத் தருகிறார்கள்.!" – அரிஸ்டாட்டில்

"முதுமையை முன்னிட்டு முன்னதாக
செய்து வைக்கும் பாதுகாப்புகளில்
சிறந்தது கல்வி.!" – அரிஸ்டாட்டில்

வேதாத்திரியப் பார்வையில் கல்வி

- எத்தகைய கல்வி நல்ல ஒழுக்கத்தை உருவாக்குமோ, மன வலிமையை வளர்க்கச் செய்யுமோ. விரிந்த அறிவைத் தருமோ, ஒருவனைத் தன்னுடைய சுய வலிமையைக் கொண்டு நிற்கச் செய்யுமோ அத்தகைய கல்விதான் நமக்குத் தேவை என்றார் சுவாமி விவேகானந்தர். இதையே மகரிஷியும்,

கல்வியெனில் எழுத்து தொழில் ஒழுக்கம் ஞானம்
கற்பதும் பின் வழுவாது நிற்பதும் ஆம்"

என்றும்

எழுத்தறிவு தொழிலறிவு
இயற்கை தத்துவ அறிவு
ஒழுக்கப் பழக்கங்கள் இவை
இழுக்கின்றி உணர்த்தும் முறையே கல்வி"

என்றும்

"வாழ வழிகாட்டி பயிற்சி
வாழவைக்கும் சிறந்த செயல் கல்வியாகும்"

என்றும்

"இயற்கை அமைப்பை உணர்ந்து வாழ்வை நடத்தும் முறையறிந்து **இனிமையாக** வாழும் "அறிவாட்சி திறத்தை" உருவாக்கிய உயாத்திக் கொள்ளும் பயிற்சியே கல்வி"
என்றும், வாழ்வின் பல்வேறு நிலைகளில் இருப்போருக்கும்
பொருந்தும் வண்ணம் கல்வியை வரையறை செய்கின்றார்.

## பயனுள்ளகல்வி முறை

"கல்வியெனில் எழுத்து தொழில் ஒழுக்கம் ஞானம்
கற்பதும் பின் வழுவாது நிற்பதும் ஆம்"

என்று கல்வி கற்கும் காலம் 20 ஆண்டுகள் என்ற கணக்கில் முதல் 10 ஆண்டுகளை இலவசக் கல்வியாம் குழந்தைக் கல்விக்கு ஒதுக்குகிறார்.

"எக்கல்வியால் வாழ்வை இனிதாக்கி உளத்தி லெழும்
அக்கேள்விகட் கெல்லாம் அறிவு விடை கண்டிடுமோ
இக்கல்விதான்..."

சிறந்த கல்வி என்று கல்விக்கு இலக்கணம் வகுத்து

"சிந்தனையை, செயல்திறனை, பண்படுத்தும் பயிற்சி உடலுக்கும்
அறிவுக்கும் ஊட்டும் பயனுள்ள கல்வி
முறை வகுக்க வேண்டும்."

"விவசாயம். துணி நெய்தல், வீடுகட்டுதல்,

விஞ்ஞான இயந்திர நுட்பம், சமையல் செய்தல்
தவறாமல் அனைவருக்கும் கட்டாயமாக
தக்க வயதிருபபதுக்குள் கற்க.......

வேண்டும் என்று அடுத்த பத்தாண்டின் கல்வித் திட்டத்தை தருகிறார்.

ஊர்தோறும் தொழிற்கல்வி, அதனோடு உடற்பயிற்சி, விளையாட்டு உற்ற துணையாய் நிற்க, இவ்விருபது வயதுக்குள்ளாக ஆன்மீக மேம்பாடு, சுகாதாரம், பொருளாதாரம், அரசியல் ஆகியனவும் சேர்ந்திட வேண்டும் என்று முழுக்கல்வியின் முறைகள் வகுத்துள்ளார்.

உலகத்தோடு இணைந்த கல்வி முறை வேண்டும்.
தற்கால கல்வி முறையை மாற்றி அமைக்க வேண்டும் என்கிறார் மகரிஷி.

தற்கால கல்வி முறை, பொருளாதாரம், அரசியல், சமுதாயம், விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம் போன்ற அனைத்துத் துறை மக்களுக்கும் அவரவர்கள் பிரச்சனைகளுக்குச் சரியான தீர்வுகளைக் கொடுத்து மக்களை நல்வழிப்படுத்தும் கல்வியாக இருக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறார்கள்.

கல்வி, செல்வம், பொருளுடைமை, மக்கள் பலம், நட்பு
கண்ணியமாம் ஆளுமைப் பேறனைத்துமிருந்தாலும்
கல்வியலே உணர்ந்த அருட்கல்வியில்லையானால்
கற்றவை அத்தனையும் சுயநலமாம் அன்புக்
கல்வியெனும் சமநோக்கு நேர்நிலையுணர்வு
கருத்தினிலே உருவாகா பிறர் பொருள் சுரண்ட
கல்வியெலாம் பயானகும் கனிவு, அன்புநீதி
கடமையிவை மறைந்து நிற்கும் தன் முனைப்பே ஓங்கும்."(ஞா.க.)

கல்வியலே சிறந்த கல்வி அருட்கல்வி என்றும் அது உலகிணைந்த கல்வி முறையாக மக்களுக்குக் கொண்டு வரவேண்டும் என்றும் மகரிஷி வலியுறுத்துகின்றார்கள்.

மேலும், தற்கால கல்வி முறை,

- உலகத்தோடு இணைந்த கல்வி முறையாகவும்,
- ஒழுக்கத்தை வளர்க்கும் கல்வி முறையாகவும்,
- தேவை உணர் கல்வி முறையாகவும்,
- செயல் விளைவு உணர் கல்வி முறையாகவும்,
- இல்லறத்தை நடத்த தேவையான கல்வி முறையாகவும்,
- சாதி சமயம் நெறிமுறைகள் உணர் கல்வி முறையாகவும்,
- உலக அமைதியை காக்க உணர்த்தும் கல்வி முறையாகவும் இருக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறார்

உயிரை உணரும் கல்வி முறை வேண்டும்.

மனம் ஒடுங்கி, இருளாகி, ஈசனோடு இணைந்து பழகுவதற்கு ஏற்ற கலவி உயிர் உணர் கல்வி. இந்த அறிவை மக்கள் பெறுவதே லட்சியமாக இருக்க வேண்டும் என்பது மகரிஷியின் நோக்கமாகும்.

கற்ற கல்வியால் மனிதன் முழு அளவில் பயனைக்
காணவெனில் தன் உயிரை உணரத்தக்க
நெற்றிக்கண் ஆசானால் திறக்கப்பெற்று
நிலையாது சுழலும் மனம் உள்ளொடுங்கி
பற்றற்ற நிலை வரையில் பழக வேண்டும்" (ஞாக.பா.)

இவ்வாறு மாணவர்களுக்குக் கொடுக்கும் கல்வி மெய்விளக்கக் கல்வியாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

ஐம்பூதங்களினால் உண்டாகும் துன்பங்களையும், கோள்களின் இயக்கத்தினால் உடலில் ஏற்படும் மாற்றங்களையும், துன்பங்களையும் எப்படிச் சமாளிப்பது என்பதைச் சொல்லித்தரும் வண்ணம் நம் கல்வி அமைய வேண்டும் என்றும் கூறுகிறார்.

செயல் விளைவு உணர்கல்வி

நாம் செய்யும் செயல்களே சூழ்நிலைக்குக் காரணமாகவும் அதனால் விளையும் இன்ப, துன்பங்களே நமக்குப் புதிய பாடங்களாகவும் அமைகின்றன.

உலகமே ஒரு பழைய பள்ளிக்கூடம்

ஒவ்வொருவருக்கும் அன்றாடம் வாழ்வில்
பல புதிய பாடம் சூழ்நிலைக்கட்கேற்ப
பலாத்காரமாகப் போதிக்கும்"

இறைவனின் ஆற்றல் எங்குமே எப்பொருளிலும் நிறைந்திருப்பதால் எந்த அசைவானாலும், செயல் ஆனாலும் அதற்குத் தக்க விளைவு பிரதிபலனாகக் கிடைப்பது இறைவனின் நீதியாகும்.

எனவே, இக்காலத்தில் கல்வியாலும் செயல்விளைவு என்ற நீதியை மக்களுக்கு உணர்த்தித் தெளிவோடு வாழச் செய்ய வேண்டியது அறிஞர்கள் கடமையாகும்

தற்காலத்தில் பல துறைகளிலும் சிந்தனையில் உயர்ந்த பேரறிஞர்கள் பெருகி வருகின்றனர்.

அறிவு விளக்கத் துறையில் செயல்விளைவு நீதிகளைக் கல்வியின் மூலம் கொண்டு வருவது எளிது.

## கல்வி நிலையம்

மகரிஷியின் மாதிரிப் பள்ளி ஆண்-பெண் இருபாலரும் தங்கிப் படிக்கும் முறையில் செயல்படும்

மாணவர்களுக்கு வேண்டிய தானிய வகைகளை உற்பத்தி செய்து கொள்ளத் தேவையான விவசாய நிலங்களும் பால்கறக்கும் மாடுகளும் இப்பள்ளியோடு இருக்கும்.

## ஆசிரியர் பண்பு

ஆசான் என்பவர் தம் வாழ்வினைக் கல்வி போதனைகள் நல்கி மாணவருக்கு வாழ வழி காட்டி, பயிற்சியூட்டி வாழும் உயர்நிலை பெற்றோர் என்கிறார் மகரிஷி.

உடலுக்கும் அறிவிற்கும் ஒழுக்கம் காட்டி உயர்த்தி

வாழ்வின் வளத்தைக் காப்பவர் ஆசிரியர்”

காந்தம், மின்சாரம், ஒளி, ஒலி, சுவை, மணம், மனம், அறிவு, இன்பதுன்ப இயல்புகள் ஆகியவற்றைச் சிந்தித்து சரியாகப் புரிந்து கொண்டவர் ஆசிரியர் என்கிறார்.

இத்தகைய ஆசிரியர், தத்துவ தலைவர். கல்விக்கு காத்துயர்த்தும் செயலால் ஆசிரியர் மேலோர். அருஉருவாம் ஆதிபரம். அகநிலைக்கு உயர்குறிப்பு அன்புருவாம் ஆசிரியன், என்று ஆசிரியர் தம் தகுதிகளையும் பெருமைகளையும் உலகுக்கு உணர்த்துகின்றார்.

**வேதாத்திரிய கல்வி முறையால் விளையும் நன்மைகள்.**

வேதாத்திரிய கல்வி முறையின் மூலம் பலவகையான நன்மைகள் கிடைக்க வாய்ப்புள்ளது.

நாட்டின் பொருளாதாரம், நாட்டின் உற்பத்தி விகிதம் இதற்கேற்றவாறு கல்வி அளிக்கப்படுவதினால் கல்வியல் முழுத்தேர்ச்சி பெற்றவர்கள் ஏதாவது ஒரு துறையில் தலைசிறந்த நிபுணராக வருவார்கள்.

மேலும், கல்விக்காக அரசாங்கம் செலவழிக்கும் பணம் சேமிக்கப்படுகிறது. கல்விக் கூடமே சிறந்த தொழிற்கூடமாக மாறிவிடும்.

வேதாத்திரி மகரிஷி கல்வியைப் பொருளாதார நோக்கிலும் மெய்ஞ்ஞான நோக்கிலும் பார்க்கிறார்.

மகரிஷியின் பார்வை சுவாமி விவோகானந்தர் மற்றும் தத்துவஞானி கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் சிந்தனையோடு ஒத்துள்ளது.

இத்தகைய கல்வி முறை இறைநிலையுணர்ந்த ஒரு முதிர்ந்த மகானின் மூலம் கிடைத்திருப்பது மானுடத்திற்கு இறையாற்றல் தந்த பரிசாகும். இதனைச் செயல்படுத்தி வெற்றி காண்போம்.

# கடவுள்

- "இந்த உலகம் இறைவனால் தோற்றுவிக்கப்படவில்லை. ஆனால் இந்த உலகை இயக்குபவன் இறைவனே!" "மனிதன் தனிமனிதச் சிந்தனை கொள்ளாமல், சமூகச்சிந்தனையோடு வாழ வேண்டும்'' – அரிஸ்டாடில்

வேதாத்திரியப் பார்வையில் கடவுள்

- கடவுள்+ கட = உள் உன் ஐம்புலன்களைக் கடந்து உள்நோக்கி அறிவை அறிவது.
- கடவுள் ஒவ்வொரு ஜீவனிலும் அதன் அறிவாகக் குடிகொண்டு இருக்கிறார்.
- கடவுளை வணங்கும்போது கருத்தினை உற்றுப்பார் நீ! கடவுளாய்க் கருத்தே நிற்கும காட்சியைக் காண்பாய் ஆங்கே.
- இறைவனைத் தேட வேண்டாம். ஏனெனில் அவன் எங்கும் இருக்கிறான்.
- கடவுளுக்கு நாம் செய்ய வேண்டிய சேவை என்ன? என சிந்தித்துப் பார்ப்போம். "கடவுள்" என்னும் தத்துவம் எங்கும் நிறைந்த ஓர் பேராற்றல். அதனுடைய தன்மைகளில் இன்னொன்று அன்பு. அந்த அன்பே உங்கள் எண்ணம், சொல், செயல்களிலும் ஊடுருவி நிறைந்திருந்தால் அதுதான் நீங்கள் இறைவனுக்காக ஆற்றக்கூடிய சேவை. எல்லோரிடத்திலும் அன்பைக் காட்டுங்கள். திருப்திப்படுத்த இதைவிடச் சிறந்த வேறொரு வழி இல்லை. அதற்கும் மேல் அவனுக்கு எதுவும் வேண்டியதுமில்லை.

- எல்லா இயக்கத்திலும் ஊடுருவி இயங்கிக் கொண்டு இருக்கிறது ஓர் ஆற்றல். அதைத்தான் பெரியவர்கள் அந்தக் காலத்தில் "கடவுள்" என்று சொன்னார்கள்.
- இதுதான் கடவுள், நீங்கள் சொல்வதெல்லாம் கடவுள் இல்லை என்று பழமைவாதிகளைப் பார்த்து சாக்ரட்டீஸ் சொன்னர்.
- நமது ஆறாவது அறிவு வேலை செய்ய வேண்டும். "நமக்குத் தெரியாமலே நமக்குள்ளாக ஒரு சக்தி, பேராற்றல் பெற்ற தெய்வீக சக்தி ஊடுருவி இருந்துகொண்டு ஒவ்வொரு செயலையும் இயக்கத்தையும் நடத்துகிறது" என்பதை யூகித்துணர முடிகிறதல்லவா? அதுதான் இறைவன் – கடவுள்.

## மனித வளம்

கட்டளையிட விரும்புபவன் முதலில்
பணிவதற்கு கற்றுக்கொள்ள வேண்டும்.!" -அரிஸ்டாட்டில்

பணிவு பற்றி வேதாத்திரியம் என்ன சொல்கிறது?

- புயலில் பெரும் மரங்கள் சரியும். கட்டடங்கள் இடியும். ஆனால் வளைந்து நிற்கும் புல் பாதிக்கப்படுவதில்லை. பணிவின் பெருமை இத்தகையது.

பணிவு கனிவு துணிவு - ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு நாள் இளம் புத்த துறவி ஒருவன் தன் வீட்டிலிருந்து பயணத்தை தொடர்ந்தான்.

அப்போது வீட்டின் முன் இருக்கும் ஒரு பரந்த ஆற்றைப் பார்த்தான். அப்போது அந்த பயணத்திற்கு தடையாக இருக்கும், இந்த ஆற்றை எப்படி கடப்பது என்று மணிகணக்கில் ஒரே யோசனையுடன் இருந்தான்.

அவ்வாறு அவன் யோசித்துக் கொண்டிருக்கையில், ஆற்றின் மறுபக்கம் இருக்கும் ஒரு பெரிய துறவியைப் பார்த்தான்.

பின் அவரை கனத்த குரலுடன் அழைத்து, ஒரு பெரியவர் என்ற மரியாதை இல்லாமல் "ஓ புத்திசாலியே, எப்படி மறுகரையை அடைவது என்று சொல்ல முடியுமா?" என்று கேட்டான்.

அதற்கு அந்த பெரிய துறவி சற்று யோசித்து, அந்த ஆற்றை பார்த்து, கனத்த குரலுடன் "மகனே, நீயே மறுகரையில் தான் இருக்கிறாய்" என்று சொல்லி சென்று விட்டார்.

## மனித வளம் - வேதாத்திரியம்

- பணிவு, கனிவு, துணிவு ஆகியன மனித வளத்தை உயர்த்த வல்ல பண்புகளாகும். பணிவு என்பது அடிமைத்தனமல்ல. ஒத்துப் போதல் என்ற கருத்தில் சமநிலை நேர்மையாகவே பணிவினைக் கருத வேண்டும். கனிவு என்பது பிறர் விருப்பத்தைக் கருணையோடும் விளைவறிந்த விழிப்போடும் நிறைவேற்றும் இருக்க மனநிலையே தான். துணிவு என்பது தன்னம்பிக்கை. (அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி)

- **அரிஸ்டாடிலும் வேதாத்திரி மகரிஷியும் - மானுடம் ஆனந்தமாக வாழ வழிகாட்டிக் கொண்டிருக்கிறார்கள்.**
- **அரிஸ்டாட்டிலும்** மகரிஷியும் ஆன்மநேய ஒருமைப்பாட்டினர்.
- இறைவனை தேடுவதில் புரட்சியை ஏற்படுத்தியவர்கள் **அரிஸ்டாட்டிலும்** வேதாத்திரி மகரிஷியும்.
- இருவருமே இணையற்ற தத்துவஞானிகள்
- வாழ்க்கை தத்துவத்தை எளிமையாக எடுத்துணர்த்தும் **அரிஸ்டாட்டில் தரும்** தத்துவ விளக்கங்கள் ஏராளம். வேதாத்திரியம் முழுவதுமே வாழ்க்கைத் தத்துவங்கள்தான்
- **அரிஸ்டாட்டிலும் வேதாத்திரியும் மானுடத்தை தட்டி எழுப்பி சிந்திக்கத் தூண்டியவர்கள்.**
- **இருவருமே மானுடத்திற்கு வாழ்க்கை வழிகாட்டியாக இருந்து வருகின்றனர்.**

- இருவருமே மானுடத்தை அடிமைத் தளத்திலிருந்து விடுவித்து புதிய பாதையைக் காட்டியவர்கள்.
- இருவருமே மனதின் சிறப்பையும் கல்வியின் அவசியத்தையும் எடுத்துச் சொன்னவர்கள்.
- இருவருமே கல்வியை பாடத்திட்டமாக்கி பல்கலைக்கழகங்கள் வரை கொண்டு சென்றவர்கள்.
- ஒரு யுக விழிப்பை ஏற்படுத்துவதே இருவரது நோக்கமாக இருந்தது. அதில் வெற்றியும் பெற்றார்கள்.

நாமும் அரிஸ்டாட்டில் வேதாத்திரி மகரிஷி சிந்தனைகளை உள்வாங்கி ஆனந்தமாக பயணிப்போமாக. வாழ்க வளமுடன்